# கல்வி

## அறிவிப்பு 1

**பாலின சமத்துவத்தை மாணவர்கள் நன்கு புரிந்து கொள்ளும் வண்ணம் பல்வேறு செயல்பாடுகளின் மூலம் மாணவ / மாணவியர்களிடையே பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பாலின குழுக்கள் அமைக்கப்படும்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படியும், மன்றத்தீர்மான எண். 173/2022, நாள்: 28.06.2022ன் படியும், பள்ளி மாணவ / மாணவியரிடையே பாலின பாகுபாடு இல்லாமல் நேர்மறை சிந்தனையை உருவாக்கவும், ஆரோக்கியமான அறிவுப்பகிர்தலை ஊக்குவிக்கும் வகையில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புகளில் பயிலும் ஒரு பள்ளிக்கு 30 மாணவர்களைக் கொண்டு பாலினக்குழுக்கள் அமைக்கப்பட்டு, பாலின சமத்துவம் (Gender Equality) குறித்த கல்வியை மாணவ / மாணவியருக்கு வழங்கும் பொருட்டு பள்ளிகளில் பாலின சமத்துவம் குறித்தான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு பாலின சமத்துவம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகிறது.

## அறிவிப்பு 2

**2022-2023ஆம் கல்வியாண்டில் 70 சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ரூ.1.86 கோடியில் இணைய இணைப்பு (Internet Connection) வழங்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் IT Cell மூலம் 38 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகளில் இணைய இணைப்பு (Internet Connection) வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு 3

**2022-2023ஆம் கல்வியாண்டில் 281 சென்னை தொடக்க / நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் விதமாக ரூ.40 இலட்சம் செலவில் கண்காட்சிகள் நடத்தப்படும்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படியும், மன்றத்தீர்மான எண். 172/2022, நாள்: 28.06.2022ன் படியும், சென்னை தொடக்க/ நடுநிலை/ உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் விதமாக மூன்று நிலைகளில் திறன்கண்காட்சிகளானது ரூ.18,62,100/- செலவில் அமைக்கப்பட்டது. முதல் நிலையில், பள்ளிகள் அளவில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டு அதில் வெற்றி பெற்ற படைப்புகளை, இரண்டாம் நிலையில் உதவி கல்வி அலுவலர்கள் அளவில் (cluster level) 10 பள்ளிகளில் அமைக்கப்பட்டு, அதில் வெற்றி பெற்ற படைப்பினை பெருநகர சென்னை மாநகராட்சி அளவில் காட்சி படுத்தப்பட்டு மாணவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டது.

அறிவிப்பு 4

**2022-2023ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் 72,000 மாணவ / மாணவியருக்கு ரூ.7.50 கோடியில் விலையில்லா சீருடைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படியும், மன்றத்தீர்மான எண். 281/2022, நாள்: 30.07.2022ன் படியும், சென்னைப் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 23,165 மாணவர்களுக்கும், 21,497 மாணவியர்களுக்கும் சீருடைகள் (இரண்டு செட் வீதம்) ரூ.2.44 கோடி செலவினத்திலும் மற்றும் 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் 13,780 மாணவர்களுக்கும், 11,657 மாணவியர்களுக்கும்

சீருடைகள் (இரண்டு செட் வீதம்) ரூ.2 கோடி தொகையிலும், ஆக மொத்தம் ரூ.4.44 கோடி தொகையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் சீருடைகள் கொள்முதல் செய்யப்பட்டு மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு 5

**இந்திய அரசாங்க நிதியில் செயல்படும் நிர்பயா திட்டத்தின் கீழ் தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள Apex Committee வாயிலாக 2022-2023ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளி மாணவிகளுக்கு பின்வரும் நலத்திட்டங்கள் செய்யப்பட உள்ளது.**

i. **ரூ.23.66 கோடியில் சானிட்டரி நாப்கின்கள் வழங்குதல் மற்றும் கழிப்பறை வசதிகள் மேம்படுத்தப்படும்.**

ii. **ரூ.5.47 கோடியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்.**

iii. **ரூ.6.91 கோடியில் தற்காப்புக் கலை பயிற்சி வழங்கப்படும்.**

(அ) சிறப்புத் திட்டங்களின் கீழ் நிர்பயா திட்டத்தின் மூலம் 159 பள்ளிகளில் சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்பட்டு வருகிறது. 193 பள்ளிகளுக்கான கழிப்பறைகளில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அதில் 99 பள்ளிகளில் கழிப்பறை பணிகள் முடிவுற்றது, இன்னும் 94 பள்ளிகளில் கழிப்பறை பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

(ஆ) கண்காணிப்பு கேமராக்கள் 159 பள்ளிகளிலும் பொருத்தப் பட்டுவிட்டது.

(இ) தற்காப்புக் கலை பயிற்சி வழங்க நிர்பயா நிதியின் மாநில அளவிலான உயர்மட்ட குழுவின் (State Level Apex Committe) ஒப்புதல் பெற்று, தமிழ்நாடு அரசின் திருத்திய நிர்வாக அனுமதி ஆணை பெறப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரும் கல்வியாண்டில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## அறிவிப்பு 6

**2022-2023ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் சென்னை பள்ளிகளில் 31 பள்ளிகளுக்கு வழங்கிய மாண்டிசோரி (Montessori) உபகரணங்களை சிறந்த முறையில் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை நடைமுறைப்படுத்துவதுடன், மேலும், இக்கல்வி முறை பிற மழலையர் வகுப்புகளிலும் படிப்படியாக செயல்படுத்தப்பட உள்ளது.**

31 பள்ளிகளில் மாண்டிசோரி உபகரணங்களை அமைத்தல் மற்றும் வழிகாட்டுதல் (Mentoring) பணி முடிவடைந்துள்ளது. மேலும், 35 மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கும் மாண்டிசோரி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## அறிவிப்பு 7

**தற்போது சிட்டீஸ் (CITIIS) திட்டத்தின் கீழ் School Management System (SMS), Learning Resources Repository Management System (LRRMS) ஆகியவற்றிற்கு ரூ.59 இலட்சம் மற்றும் ரூ.2.45 கோடியில் School Leadership Development & Transformation (SLDT) பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மட்டைப்பந்து (Cricket) மற்றும் கால்பந்து (Football) விளையாட்டுகளில் தலைசிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.35 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.**

(i) அனைத்து பள்ளிகளிலும், ஐந்து தொகுப்புகளில், தலைமை ஆசிரியர் மற்றும் உதவி தலைமை ஆசிரியர்கள் உட்பட 600 ஆசிரியர்களுக்கு ஐந்து தொகுதிகளாக, 10 நாட்கள் தலைமை பண்பிற்கான SLDTபயிற்சி வழங்கப்பட்டது. பள்ளிகளில், இப்பயிற்சியை நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு கள பணியாளர்கள் பள்ளிகளுக்கு சென்று, 10 முறை பார்வையிட்டு இப்பயிற்சி திட்டம், சிறந்த முறையில் செயலாற்றுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளனர். Dashboard மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகள் EMIS APP ஒருங்கிணைத்தல் பணி நடைபெற்று வருகிறது.

(ii) CITIIS திட்டத்தின் வாயிலாக, கால்பந்து பயிற்சி சிறந்த இலக்குகளுடன் மூன்று பள்ளிகளில் வழங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. இப்பயிற்சி ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட உள்ளது.

(iii) CITIIS திட்டத்தின் வாயிலாக, கிரிக்கெட் பயிற்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் புகழ்பெற்ற திரு. ரவிச்சந்திரன் அஸ்வின் வழிகாட்டியாக உள்ள, Gen-Next Academy-யுடன் கையெழுத்தானது. 300 மாணவர்களை தேர்வு செய்தல் முடிந்தது. இறுதி தேர்விற்கு பிறகு, கிரிக்கெட் பயிற்சி ஏப்ரல் மாதம் பள்ளிகளில் தொடங்கப்பட உள்ளது

**அறிவிப்பு 8**

**பள்ளிகளின் உட்கட்டமைப்பை CITIIS திட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக நடப்பு நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியால் ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டு இப்பணிகள் விரைவாக முடிக்கப்படும்.**

சிட்டீஸ் (CITIIS) திட்டத்தின் கீழ் 28 பள்ளிகளின் உள்கட்டமைப்பு பணிகள் 63% முடிக்கப்பட்டது. 7 பள்ளிகளில் உள்கட்டமைப்பு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

அறிவிப்பு **9**

**சென்னைப் பள்ளிகளில் குடிநீர் வழங்கும் குழாய்களில் ஏற்படும் பழுது, மின்சாதனங்களில் ஏற்படும் பழுது மற்றும் கழிவறைகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை மாணவர்களின் நலன் கருதி உடனடியாக சரி செய்து கொள்வதற்கு 119 சென்னை தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.25,000/- வீதமும், 92 சென்னை நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.30,000/- வீதமும், 38 சென்னை உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.50,000/- வீதமும் மற்றும் 32 சென்னை மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.50,000/- வீதமும் ஆக 281 தலைமையாசிரியர்களுக்கு ரூ.92.35 இலட்சம் மிகாமல் செலவு மேற்கொள்வதற்கு அவசர செலவின நிதி (Imprest Amount) வழங்கப்படும்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படியும், மன்றத்தீர்மான எண்.176/2022, நாள்: 28.06.2022ன் படியும், சென்னைப் பள்ளிகளில் குடிநீர் வழங்கும் குழாய்களில் ஏற்படும் பழுது, மின்சாதனங்களில் ஏற்படும் பழுது மற்றும் கழிவறைகளில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை மாணவர்களின் நலன் கருதி உடனடியாக சரி செய்து கொள்வதற்கு, 117 சென்னை தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.25,000/- வீதமும், 92 சென்னை நடுநிலைப்பள்ளிகளுக்கு ரூ.30,000/- வீதமும், 38 சென்னை உயர்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.50,000/- வீதமும் மற்றும் 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.50,000/- வீதமும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அவசர செலவின நிதியாக (Imprest Amount) வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு **10**

**சென்னைப் பள்ளி மாணவர்களின் உடல்நலம், மனநலம் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றை பேணிக் காத்து கல்வியை திறம்பட கற்றிட, திருவான்மியூரை சுற்றியுள்ள 23 சென்னைப் பள்ளிகளில் சுமார் 5,000 மாணவர்களுக்கு சோதனை அடிப்படையில் தன்னார்வலர்கள் மூலம் காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. காலைச் சிற்றுண்டி திட்டம் மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருப்பதால், மேலும் பல பள்ளிகளில் தன்னார்வலர்களின் மூலம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி அனைத்து பள்ளி மாணவர்களின் (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) உடல் நலம், மனநலம் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றை பேணிக் காத்து கல்வியை திறம்பட கற்றிட காலை சிற்றுண்டி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1, 3, 4 மற்றும் 5வது மண்டலங்களிலுள்ள சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பிற மண்டலங்களுக்கு இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

## அறிவிப்பு 11

**சென்னைப் பள்ளி மாணவர்களிடையே மேடைப் பேச்சு, விவாதம், படைப்புத்திறன், சிந்தனை வளர்த்தல், குழுப்பணிகளை திறம்பட மேற்கொள்ளுதல், தலைமைத்துவ பண்பை வளர்க்கவும், சர்வதேச விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் மாதிரி ஐக்கிய நாடு குழு அமைக்கப்பட உள்ளது. மேலும், ஜனநாயகத்தின் வேர்களை வலுப்படுத்தவும், ஒழுக்கம், சகிப்புத்தன்மை, ஆரோக்கியமான பழக்கங்களை வளர்த்துக் கொள்ளவும், பொறுப்புள்ள இளைஞர்களை உருவாக்கவும், பாராளுமன்ற நடைமுறைகளை அறிந்து கொள்ளும் வகையில் இளைஞர்கள் பாராளுமன்ற குழு அமைக்கப்படும்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படியும், மன்றத்தீர்மான எண்.177/2022, நாள்:28.06.2022ன் படியும், 2022-2023ஆம் கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் இளைஞர் பாராளுமன்ற (Youth Parliament) செயல்பாட்டின் வழிமுறைகளின் படி, இளைஞர் பாராளுமன்ற குழு அமைக்கப்பட்டு ஐந்து இளைஞர் பாராளுமன்ற அமர்வுகள் நிறைவுற்றது. உதவி கல்வி அலுவலர் அளவில் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகள் பிப்ரவரி மாதத்தில் நடந்து முடிவுற்றது.

## அறிவிப்பு 12

**சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களிடையே வாசிப்புத்திறனை மேம்படுத்தவும், பொது அறிவினை வளர்க்கவும், போட்டித் தேர்வுகளை திறம்பட எதிர்கொள்வதற்கு ஏதுவாக பள்ளி நூலகங்களிலிருந்து புத்தகங்களை வீட்டிலும் பயன்படுத்த வழிவகை செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படியும், மன்றத்தீர்மான எண்.283/2022, நாள்: 30.07.2022ன் படியும், அனைத்து சென்னை தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு “பள்ளி இல்ல நூலகம்” (School Lending Library) அமைக்கப்பட்டுள்ளது. நான்காம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து சென்னை பள்ளி மாணவர்களுக்கு பள்ளி நூலகங்களில் உள்ள புத்தகங்களை வழங்கி, வீட்டிலும் படித்து பயன்பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## அறிவிப்பு 13

**பள்ளியில் கற்றலில் சிறந்து விளங்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக பேட்ஜ் வழங்கும் முறையும் மற்றும் ஒவ்வொரு வகுப்பில் உள்ள மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து மாணவர்களிடையே (சிவப்பு, ஊதா, பச்சை மற்றும் மஞ்சள்) பொறுமை, தலைமை பண்பு, சரியான முடிவு எடுத்தல், சகிப்புத்தன்மை, குழுவாக பணிசெய்தல் போன்ற பண்புகளை வளர்க்க வழிவகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படியும், மன்றத்தீர்மான எண்.282/2022, நாள்: 30.07.2022ன் படியும், சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே பொறுமை, தலைமை பண்பு, சரியான முடிவு

எடுத்தல், சகிப்புத்தன்மை, குழுவாக பணிசெய்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதற்காக ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து (சிவப்பு, ஊதா, பச்சை மற்றும் மஞ்சள்) குழுத் தலைவர்களுக்கும், பள்ளி அளவில் தலைவர், துணை தலைவர் என நியமித்து மாணவர்களுக்கு அதற்கான பேட்ஜ் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் விளையாட்டுத் திறனில் சிறந்து விளங்கும் மாணவர்களை அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கான பேட்ஜ் வழங்குவதற்கும் ரூ.5,14,008/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## அறிவிப்பு 14

**20 சென்னைப் பள்ளிகளில் ஆங்கிலம் பேசும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களிடையே ஆங்கிலம் பேசும் திறனை வளர்ப்பதால் உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் உலகத்தின் எப்பகுதிக்கு சென்றாலும் எதிர்கொள்ளும் ஆற்றலை மேம்படுத்தும் விதமாக பல பள்ளிகளில் ஆங்கில மொழி பேசும் பயிற்சியை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

ஆங்கில மொழி பேசும் திறனை மேம்படுத்த பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது:-

1. CITIIS திட்டத்தின் கீழ் English Language Lab அமைக்கப்பட்டுள்ளது (18 பள்ளி வளாகங்களில்)
2. வகுப்பறைகளில் ஆங்கில வகுப்பில் ஆங்கிலம் பேச நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.
3. பள்ளி அளவில் வழிபாட்டு நேரத்தில் ஒவ்வொரு புதன் கிழமையும் ஒவ்வொரு நிகழ்ச்சியை நடத்துதல்.

4. i) தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உதவியால் ஆங்கில மொழி பயிற்சி 20 பள்ளிகளிலும் (Chennai Volunteers)

ii) மதி பவுண்டேஷன் மூலம் 10 பள்ளிகளில் Enjoy English பயிற்சி (1 முதல் 4ஆம் வகுப்புகள்) அளித்தல்,

iii) ஆசிரியர்களுக்கு U.S. Consulate மூலம் பயிற்சி வழங்கப்பட்டு 21 ஆசிரியர்கள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

**அறிவிப்பு 15**

**சென்னைப் பள்ளிகளில் அடிக்கடி ஏற்படும் பழுதுகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை காலதாமதமின்றி மேற்கொள்ள ஏதுவாக 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.16.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

சென்னைப் பள்ளிகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இந்த நிதியாண்டில் ரூ.13.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரு.8.60 கோடி இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

## <u>பொது சுகாதாரம்</u>

**அறிவிப்பு 16**

**2022-2023ஆம் நிதியாண்டில் 3 டயாலிசிஸ் மையங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும். மேலும், படிப்படியாக ஒவ்வொரு மண்டலங்களிலும் டயாலிசிஸ் மையங்கள் ஏற்படுத்தப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-7-ல் அம்பத்தூர் பாடியில் உள்ள மருத்துவமனையிலும், மண்டலம்-4-ல் இளங்கோ நகரில் உள்ள நகர்ப்புற சமுதாய நல மையத்திலும், டயாலிசிஸ் மையம்

துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மண்டலம்-15 செம்மஞ்சேரியில் உள்ள நகர்ப்புற ஆரம்பர சுகாதார மையத்தில் டயாலிசிஸ் மையம் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு 17**

**மாநகர மருத்துவமனை கட்டிடங்களில் மேற்கூரை கசிவுகளை சரிசெய்தல் இதர கட்டுமானப் பணிகள், பராமரிப்பு மற்றும் மருத்துவமனை கட்டிடங்களின் பழுது பார்க்கும் பணிக்காக 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மாநகர மருத்துவமனை பராமரிக்கப்பட்டு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக இந்த நிதியாண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.3.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**அறிவிப்பு 18**

**கொசு ஒழிப்புப் பணிகளை மேலும் தீவிரப்படுத்த 2022-2023ஆம் நிதியாண்டில் 30 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பு இயந்திரங்கள், 100 எண்ணிக்கையிலான கையினால் எடுத்துச் செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 200 எண்ணிக்கையிலான கொசு மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும். மேலும், சென்ற ஆண்டினை போலவே ஆளில்லா வானூர்தி (drone) மூலம் கொசுப்புழுக் கொல்லி மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.4.62 கோடி ஒதுக்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசுக்களை கட்டுப்படுத்த 200 கைத்தெளிப்பான்கள் கொள்முதல் செய்யப்பட்டு மண்டலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றுடன் சேர்த்து தற்போது 412 கைத்தெளிப்பான்களும் 292 கையினால் எடுத்து செல்லும் சிறிய புகை பரப்பும் இயந்திரங்களும் 68 பெரிய புகை பரப்பும் இயந்திரங்களும் பயன்பாட்டில் உள்ளன. மேலும் இயந்திரங்கள் தேவை அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும். மேலும் 6 டிரோன்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு 19

**2022-2023ஆம் நிதியாண்டில் 3 புதிய வீடற்றோருக்கான காப்பகங்கள் கட்டுவதாக தீர்மானிக்கப்பட்டு, அவை ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 நகர்புற வீடற்றோர் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன இக்காப்பகங்களில் தற்போது 1562 நபர்கள் தங்கி பயன் பெற்று வருகின்றனர். கடந்த 2021- 22 ஆம் ஆண்டு மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி கூடுதலாக மூன்று புதிய காப்பகங்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டது. தற்போது மூன்று காப்பகங்கள் கட்ட 3 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெற்று புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறிவிப்பு 20

**2022-2023ஆம் நிதியாண்டில் மேலும் இரண்டு நாய் இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையங்கள் மீனம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லுரில் ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மீனம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரில் புதிய 2 நாய் இனப்பெருக்க கட்டுப்பாட்டு மையங்களில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, இரண்டு புதிய மையங்களிலும் தெருநாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறிவிப்பு 21

**இந்த நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பயன்பெறும் உள் மற்றும் புற நோயாளிகளின் எண்ணிக்கை பல்வேறு நிகழ்வுகள் மூலம் கூடுதலாக 10 சதவீதம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கை பெருமளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

2021-2022-ஆம் நிதியாண்டில், 81.53 இலட்சம் நபர்கள் புறநோயாளிகளாகவும் 36,536 நபர்கள் உள்நோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். அறுவை சிகிச்சை வழியாக 11,539 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. 2022-2023-ஆம் நிதியாண்டில் ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை புறநோயாளிகளின் எண்ணிக்கை 1,19,08,967 நபர்களும், உள் நோயாளிகளின் எண்ணிக்கை 2,18,235 நபர்களும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு பயன் அடைந்துள்ளனர்.

## அறிவிப்பு 22

**இந்த நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து களப்பணியாளர்களுக்கும் (சாலைப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள்) முன்று மாதத்திற்கு ஒரு முறை தொடர்ச்சியாக மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.**

2022-2023-ஆம் நிதியாண்டில் 05.08.2022 முதல் 17.01.2023 வரை பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து களப்பணியாளர்களுக்கு, மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 12,960 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது. மேலும், மருத்துவ முகாம்கள் மூன்று மாதத்திற்க்கு ஒரு முறை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## அறிவிப்பு 23

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தெருக்கள் மற்றும் பிரதான சாலைகளில் மனநலம் குன்றிய நிலையில் சுற்றித் திரியும் நபர்களை கண்டறிந்து அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் இரவுநேர காப்பகங்களில் தங்கவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், அவர்களுக்கான மருத்துவ ஆலோசனை வழங்கவும் மண்டல அளவில் ஒரு மருத்துவ ஆலோசனை குழு அமைக்கப்படும்.**

நகர்புற வீடற்றோர் காப்பக பணியாளர் மூலமாக, தினந்தோறும் களப்பணி மேற்கொண்டு, மனநலம் பாதிக்கப்பட்டு தெருக்களில் சுற்றித்திரியும் நபர்களை மீட்டெடுத்து, அவர்களை காவல்துறையின் அனுமதி பெற்று காப்பகத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். மேலும், இக்காப்பகங்களில் உறைவிட வசதிகள் மட்டுமின்றி பாதுகாப்பான சூழல், மாதம் ஒருமுறை மருத்துவமுகாம், தொடர் ஆலோசனை, குடும்பத்துடன் மறுஇணைப்பு செய்து வைப்பது, மறுவாழ்வு ஏற்படுத்தி தருவது ஆகிய சேவைகள் அளிக்கப்படுகின்றன.

பிரத்யேகமாக மனநலம் பாதித்த நபர்களுக்காக, கீழ்கண்டுள்ள காப்பகங்கள் செயல்பட்டு வருகிறது.

1. அன்பகம் தொண்டு நிறுவனம்(பெண்கள்) – 24 பயனாளிகள்
2. அன்பகம் தொண்டு நிறுவனம் (ஆண்கள்) –35 பயனாளிகள்
3. சார்திப் தொண்டு நிறுவனம் (ஆண்கள்) –36 பயனாளிகள்
4. ஹோப் பப்ளிக் சேரிட்டபுள் டிரஸ்ட் தொண்டு நிறுவனம் (பெண்கள்) –39 பயனாளிகள்
5. பேனியன் தொண்டு நிறுவனம் (ஆண்கள்) - 32 பயனாளிகள்.

மாற்றுதிறனாளிகளின் ஆணையம், மனநலம் குன்றிய / பாதித்தவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர நிலையான வழிகாட்டுதல்களை அளித்துள்ளது.

## திடக்கழிவு மேலாண்மை

### அறிவிப்பு 24

**இந்நிதியாண்டில் 16,500 எண்ணிக்கையிலான நெகிழி குப்பைத் தொட்டிகள் (Plastic Bins) ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

தற்போது தேவைக்கேற்ப 10,000 எண்ணிக்கையில் Plastic Bin கொள்முதல் செய்து 4,5,6,7 மற்றும் 8 ஆகிய மண்டலங்களுக்கு வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

அறிவிப்பு 25

**2022-2023ஆம் நிதியாண்டில் ஒவ்வொரு மாதமும் 100 மெட்ரிக் டன் அளவில் மொத்தம் 1,200 மெட்ரிக் டன் உரம் தமிழ்நாடு கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிமிடெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்படும்.**

ஒரு மெட்ரிக் டன் உரத்திற்கு ரூ.3,000/- மற்றும் GST 5 சதவீதத்துடன் விலை நிர்ணயம் செய்து, மொத்தம் 3,250 மெட்ரிக் டன் உரம் பொது மக்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிமிடெட் நிறுவனத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அறிவிப்பு 26

**மாதவரத்தில் ஈரக்கழிவுகள் மூலம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யும் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

ஈரக்கழிவு மூலம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யும் ஆலை (100 Ton Per Day) மாதவரத்தில் பணிகள் முடிக்கப்பட்டு 22.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆலை துவக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 5 ஆலைகளின் பணிகள் துவக்கப்பட்டு பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றது.

அறிவிப்பு 27

**2022-2023ஆம் நிதியாண்டில் 54,000 மெட்ரிக் டன் அளவிலான தோட்டம் மற்றும் தேங்காய் மட்டை கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படும்.**

01.04.2022 முதல் இதுநாள் வரை 48,321 மெட்ரிக் டன் அளவிலான தோட்டக்கழிவுகள் மற்றும் தேங்காய் மட்டை கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது.

அறிவிப்பு 28

**2022-2023ஆம் நிதியாண்டில் 2,600 மெட்ரிக் டன் அளவில் மறுசுழற்சி செய்ய இயலாத எரியக்கூடிய உலர் கழிவுகள் சிப்பங்களாக சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பியும், குப்பை கிடங்குகளில் பிளாஸ்டிக் கொட்டப்படுவதை தடுக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் முயற்சி எடுக்கப்படும்.**

01.04.2022 முதல் இதுநாள் வரை 5,200 மெட்ரிக் டன் அளவில் மறுசுழற்சி செய்ய இயலாத எரியக்கூடிய உலர் கழிவுகள் சிப்பங்களாக சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது. இதன் காரணமாக குப்பை கிடங்குகளில் நெகிழி கழிவுகள் சேர்வது தடுக்கப்படுகிறது.

அறிவிப்பு 29

**2022-2023ஆம் நிதியாண்டில் 16,500 மெட்ரிக் டன் அளவிலான மறுசுழற்சி செய்ய இயலாத எரியக்கூடிய உலர் கழிவுகள் எரிகலன்கள் மூலம் அழிக்கப்படும். இதனால் குப்பை கிடங்கில் குப்பைகள் குறைக்கப்படும்.**

2022-2023ஆம் நிதியாண்டில் சென்னை மாநகராட்சியில் உருவாகும் குப்பைகளில், சுமார் 16,500 மெட்ரிக் டன் அளவிலான மறுசுழற்சி செய்ய இயலாத எரியக்கூடிய உலர் கழிவுகள், எரிகலன்கள் மூலம் அழிக்கப்பட்டது. இதனால் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு 30

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உருவாகும் மறுசுழற்சி செய்யக்கூடிய உலர் கழிவுகள் 190 எண்ணிக்கையிலான வள மீட்பு மையங்கள் மூலமாக முறையாக சேகரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சியாளர்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் விற்பனை தொகையானது அந்தந்த தூய்மை பணியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.**

மறுசுழற்சி செய்யக்கூடிய உலர் கழிவுகள் அங்கீகரிக்கப்பட்ட மறு சுழற்சி நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் பெறப்படும் வருவாயினை தூய்மை பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**அறிவிப்பு 31**

**2022-2023ஆம் நிதியாண்டில் 11 இலட்சம் கன மீட்டர் அளவிலான கழிவுகள் அகழ்ந்தெடுத்து சீரமைக்கப்படும்.**

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் Bio - Mining முறையில் 01.04.2022 முதல் இதுநாள் வரையில் 11.40 இலட்சம் கன மீட்டர் அளவிலான கழிவுகள் அகழ்ந்தெடுத்து சீரமைக்கப்பட்டது.

**அறிவிப்பு 32**

**2022-23-ஆம் நிதியாண்டில், துப்புரவு பணி மேலும், முழுமையாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள கூடுதலாக 795 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும்.**

அனைத்து வாகனங்களும் பெறப்பட்டு துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## இயந்திரப் பொறியியல் துறை

**அறிவிப்பு 33**

**மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகியவற்றிற்கு உட்பட்ட பகுதிகளில் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களை நிறுத்தி வைக்க உள்கட்டமைப்பு வசதிகளுடன் வாகன நிறுத்துமிடத்திற்கான கட்டடம் கட்டும் பணி ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

Phase – I: மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகியவற்றிற்குட்பட்ட பகுதிகளில் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களை நிறுத்தி வைக்க உள்கட்டமைப்பு வசதிகளுடன் வாகன நிறுத்துமிடத்திற்கான கட்டடம் கட்டும் பணி முடிவடைந்தது.

Phase - II: மண்டலம் 6 மற்றும் 7 ஆகியவற்றிற்குட்பட்ட பகுதிகளில் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களை நிறுத்தி வைக்க உள்கட்டமைப்பு வசதிகளுடன் வாகன நிறுத்துமிடத்திற்கான கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**அறிவிப்பு 34**

**மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகியவற்றில் உள்ள லாரி நிலையங்களை மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் புதியதாக கட்டமைப்பு செய்ய ரூ.4 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயற்படுத்தப்படும்.**

லாரி நிலையங்களை மேம்படுத்திட, மண்டலம் – 4, 5, 6, 7 மற்றும் 8ல் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

**அறிவிப்பு 35**

**புதிய கனரக காம்பாக்டர் வாகனங்கள் (14 கனமீட்டர் கொள்ளளவு) 44 எண்ணிக்கையிலும், இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் (8 கனமீட்டர் கொள்ளளவு) 30 எண்ணிக்கையிலும் ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிதி பங்களிப்புடன் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ரூ.32.38 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

44 கனரக மற்றும் 30 இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்.TPS Infrastructure Pvt. Ltd., New Delhi அவர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று 03.08.2022 தேதியிட்ட பணி ஆணையினை ஒப்பந்ததாரர் 16.08.2022 அன்று பெற்றுக்கொண்டனர்.

வாகனங்கள் அடிச்சட்டம் பெறுவதில் கால தாமதம் ஏற்படுவதால் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் (90 நாட்கள்) வாகனங்களை வழங்க இயலாது என தெரிவித்து ஒப்பந்ததாரர் கால கெடுவினை 120 நாட்கள் நீட்டிப்பு செய்ய கோரியிருந்தனர். மன்றத்தின் அனுமதி பெற்று வாகனங்களை வழங்க 13.03.2023 வரை கால நீட்டிப்பு ஆணை பெறப்பட்டது. இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் கனரக காம்பாக்டர் வாகனங்கள் வழங்கப்படுவதற்கு முன், ஒப்ப விதிகளின்படி மூன்றாம் நபர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது, மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களும் நேரில் சென்று முன்ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். மூன்றாம் நபர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோரின் இறுதி ஆய்வறிக்கை பெறப்பட்ட பின், 15.04.2023க்குள் வாகனங்கள் பெறப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது..

## <u>பேருந்து சாலைகள் துறை</u>

### அறிவிப்பு 36

**சென்னை மாநகரை அழகுபடுத்தும் நோக்கில் பல்வேறு மண்டலங்களில் தமிழக அரசால் 26 எண்ணிக்கையிலான நீருற்றுக்கள் (Water Fountains) அமைக்கும் பணிக்கு ரூ.1.29 கோடி நிதி சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.**

26 எண்ணிக்கையிலான நீருற்று பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

### அறிவிப்பு 37

**பழைய சாலை பெயர் பலகைகளை அகற்றி புதிதாக டிஜிட்டல் பெயர் பலகைகளாக மாற்றி அதில் புதிய எழுத்துக்கள் பொறிக்கப் படுவதுடன், அஞ்சல் குறியீடு, மண்டலம் மற்றும் புதிய வார்டு எண்களும் இடம் பெறும் வகையில் தமிழக அரசால் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.8.43 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மொத்தம் 4,681 பழைய பெயர் பலகைகளை அகற்றி டிஜிட்டல் பெயர் பலகைகளாக மாற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## அறிவிப்பு 38

**பெருநகர சென்னை மாநகராட்சி மாற்று திறனாளிகளுக்கு வசதி செய்யும் சிறப்பு முயற்சியாக, மண்டலம்-9, வார்டு-125ல் உள்ள மெரினா கடற்கரையில் (காந்தி சிலைக்கு பின்புறம்) மாற்று திறனாளிகள் கடல் அலை அருகில் சென்று பார்வையிட, நிரந்தர பாதை அமைக்கும் பணிக்கு சிங்கார சென்னை திட்டம் 2.0ல் ரூ.1.14 கோடி பெறப்பட்டுள்ளது. பணிகள் துவங்கப்பட்டு 2 மாத காலத்திற்குள் முடிக்கப்படும்.**

மாற்றுத் திறனாளிகள் கடல் அலைகள் அருகில் சென்று பார்வையிட வசதியாக பாதை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

## அறிவிப்பு 39

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆண்டுதோறும் தோராயமாக ரூ.52.26 கோடிக்கு வருவாய் ஈட்டும் வகையில் நிழற்குடைகளை தனியார் பங்களிப்புடன் கட்டுதல், மேம்படுத்தல், பராமரித்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு பின் ஒப்படைத்தல் (Build, Operate and Transfer - BOT) என்ற முறையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1,000 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை நவீனப்படுத்தி உயர்தரத்தில் அமைக்கும் பணி செயல்படுத்தப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 844 பேருந்து நிழற்குடை புதுப்பித்தல் பணிக்கு ஒப்பம் கோரப்படவுள்ளது. மேலும், 156 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் வார்டு உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக அவசியம் மற்றும் அவரம் கருதி பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப, பேருந்து நிழற்குடை அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## மழைநீர் வடிகால் துறை

**அறிவிப்பு 40**

**சிங்கார சென்னை 2.0 நிதியில், 40.80 கி.மீ. நீளத்திற்கு ரூ.184.67 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இந்த நிதியாண்டில் முடிக்கப்படும். மேலும் இரண்டாம் கட்டமாக, 20.08 கி.மீ நீளத்திற்கு ரூ.70 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

சிங்கார சென்னை 2.O நிதியில் 40.80 கி.மீ நீளத்திற்கு ரூ.184.67 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 30.96 கி.மீ. நீளத்திற்கான (93.96%) பணிகள் முடிவுற்றுள்ளது.

இரண்டாம் கட்டமாக 20.02 கி.மீ நீளத்திற்கு ரூ.70 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்க ஒப்பங்கள் கோரப்பட்டு, 15.51 கி.மீ. நீளத்திற்ககான (84.52%) பணிகள் முடிவடைந்துள்ளது.

**அறிவிப்பு 41**

**தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், உலக வங்கி நிதியின் கீழ் 43 சிப்பங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் அனைத்தும் 2022-2023ஆம் நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.**

உலக வங்கி நிதியின் கீழ் 43 சிப்பங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 44.88 கி.மீ நீளத்திற்கு ரூ.119.93 கோடி மதிப்பீட்டில் ஒப்பங்கள் கோரப்பட்டு, 38.56 கி.மீ. (97.40%) நீளத்திற்கான பணிகள் முடிவடைந்துள்ளது.

**அறிவிப்பு 42**

**பருவமழை 2020 மற்றும் 2021ன் போது வெள்ளத்தினால் மிகவும் பாதிப்படைந்த இடங்களில், தமிழக அரசின் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (Infrastructure and Amenities Fund) நிதியிலிருந்து வரப்பெற்ற தொகையிலிருந்து, பல்வேறு இடங்களில் 6 சிப்பங்களில், ரூ.26.28 கோடி**

**மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 2022-23ஆம் நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.**

உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (Infrastructure and Amenities fund) நிதியில் மழைநீர் வடிகால் பணிகள் 6 சிப்பங்களாக ரூ.26.28 கோடி மதிப்பீட்டில் ஒப்பங்கள் கோரப்பட்டு பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளது.

அறிவிப்பு **43**

**மண்டலம்-1, 2, 3, 6 (பகுதி), 7 (பகுதி) மற்றும் 8 (பகுதி)யில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 46 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, 2022-23 நிதியாண்டில் துரிதமாக ரூ.600 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கப்படும்.**

மண்டலம் 1,2,3,6 (பகுதி), 7 (பகுதி) மற்றும் 8 (பகுதி)யில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 46 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, 2022-23 நிதியாண்டில் மொத்த திட்ட மதிப்பீட்டில் இதுவரை ரூ.1,323 கோடி மதிப்பீட்டில் 60.70% பணிகள் முடிவடைந்துள்ளன.

அறிவிப்பு **44**

**KfW என்ற ஜெர்மன் நாட்டு வங்கி நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் பல்வேறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்தில் 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கப்படும்.**

KFW ஜெர்மன் நாட்டு வங்கி நிதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளில் முதற்கட்டமாக M1 திட்டம் மற்றும் M2 திட்டத்தில் 39.78 கி.மீ. நீளத்தில் ரூ.150.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் நடைபெறுகிறது. இதுவரை 20% பணிகள் முடிவடைந்துள்ளன. இரண்டாம் கட்டமாக, 120.55 கி.மீ நீளத்தில்

ரூ.447 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு, பணி தொடங்கப்படவுள்ளது. மேலும், முன்றாம் கட்டமாக 122.86 கி.மீ. நீளத்தில் ரூ.665 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளுக்கு தேவையான விரிவான வடிவமைப்பு அறிக்கை KfW வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், கடந்த வடகிழக்கு பருவமழைக் காலத்தில் மழைநீர் தேங்கிய பகுதிகளில், மழைநீர் வடிகால் அமைக்க தேவையான மதிப்பீடு மற்றும் வடிவமைப்பு அறிக்கை தயாரிக்கும் பணிகள் GITEC என்ற நிறுவனத்தின் மூலம் நடைபெற்று வருகிறது. மேலும், தொடர்ச்சியாக கடலோர ஒழுங்கு முறை ஆணையத்தின் ஒப்புதல் பெறுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

## அறிவிப்பு 45

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள குளங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், மிகபெரிய குளங்கள் புனரமைப்பு பணி இந்திய அரசின் அம்ரூட் 2.0 திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் :-**

சமீபத்தில், அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ஏரிகளை சீரமைக்க தமிழ்நாடு அரசு கொள்கை ரீதியாக 3 ஏரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2 ஏரிகளுக்கு, அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

## அறிவிப்பு 46

**நடப்பு நிதியாண்டிலிருந்து மழைநீர் வடிகால் தூர்வரும் பணிகள் நடைபெறுவதற்கு ஏதுவாக, மண்டலம்-4 மற்றும் மண்டலம் -6ல் நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்ட நிதியின் கீழும், மற்ற மண்டலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியின் மூலமும், வருடம் முழுவதும் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.**

மண்டலம் 4 மற்றும் மண்டலம் 6ல் நகர்புற வேலை வாய்ப்பு திட்ட நிதியின் கீழ் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. மற்ற மண்டலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் தூர்வாரும் பணிகளுக்கு 25 சிப்பங்களாக ரூ.39.55 கோடி மதிப்பீட்டில் ஒப்பங்கள் கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது.

## பூங்கா

**அறிவிப்பு 47**

**சென்னை மாநகரை அழகுபடுத்தும் விதமாகவும், பசுமை பரப்பை அதிகரிக்கும் விதமாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியால் 722 பூங்காக்கள் மற்றும் 220 விளையாட்டு திடல்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 111 பூங்காக்கள் தன்னார்வலர்கள் மற்றும் ஆர்வமுள்ள தனியார் நிறுவனங்கள் மூலம் தத்தெடுப்பு முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்களை பராமரிக்கும் பணிகளுக்கு 2022-23ஆம் நிதியாண்டில் ரூ.16.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தனியார் ஒப்பந்ததாரர் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியால் 786 பூங்காக்கள் மற்றும் 222 விளையாட்டுதிடல்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 57 பூங்காக்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் தத்தெடுப்பு முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்களை பராமரிக்கும் பணிகளுக்கு 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.32.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தனியார் ஒப்பந்ததாரர் மூலமாக பராமரிக்கப்படுகிறது.

அறிவிப்பு 48

**2022-2023ஆம் நிதியாண்டில் “சிங்காரச் சென்னை 2.0” திட்டம் மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அனைத்து மண்டலங்களிலும் 2,50,000 எண்ணிக்கையில் நாட்டு மரக்கன்றுகள் தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் நடப்படவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2022-2023 ஆம் நிதியாண்டில் இந்நாள் வரை 1,09,221 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. மேலும் CRRT, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் பங்களிப்புடன் 1.10 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

அறிவிப்பு 49

**2022-23ஆம் நிதியாண்டில் “சிங்காரச் சென்னை 2.0” திட்டம் மற்றும் “நமக்கு நாமே திட்டத்தின்” மூலம் பொதுமக்கள் பங்களிப்புடன் சாலை மையத் தடுப்புகள் மற்றும் போக்குவரத்து தீவுத்திட்டுகள் பராமரிக்கப்படும். மேலும், மீதமுள்ள சாலை மையத் தடுப்புகள் மற்றும் போக்குவரத்து தீவுத்திட்டுகள் ஆர்வமுள்ள தனியார் நிறுவனங்கள் மூலம் தத்தெடுப்பு முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

சாலை மைய தடுப்புகளில், 104 சாலை மைய தடுப்புகள் (Center median) பெருநகர சென்னை மாநகராட்சியினால், 70 சாலை மைய தடுப்புகள் தத்தெடுப்பு (Adoption) மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 113 சாலை தீவுத்திட்டு தடுப்புகளில் (Traffic Island) 79 எண்ணிக்கை பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும், 34 எண்ணிக்கையிலான சாலை தீவுத்திட்டு தடுப்புகள் தத்தெடுப்பு (Adoption) முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## <u>கட்டடம்</u>

### அறிவிப்பு 50

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 63 எண்ணிக்கையில் சமுதாய நலக்கூடங்கள் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. இந்த சமுதாய நலக்கூடங்களை சிறந்த முறையில் பராமரிக்க 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.**

மண்டலங்கள் வழியாக ஒப்பங்கள் கோரப்பட்டு, ரூ.1.18 கோடி மதிப்பீட்டிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், எஞ்சிய பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அறிவிப்பு 51

**தூய்மை இந்தியா திட்டம் மற்றும் நிர்பயா திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து சென்னை மாநகரில் 366 இடங்களில் உள்ள பொதுக்கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் ரூ.36.34 கோடி மதிப்பீட்டில் 918 எண்ணிக்கையிலான கழிப்பிட இருக்கைகளும் மற்றும் 671 எண்ணிக்கையிலான சீறுநீர் கழிப்பான்களும் 2022-23ஆம் நிதியாண்டில் மறு சீரமைக்கப்படும்.**

அ) தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ்கண்ட கழிப்பறை இருக்கைகள் கட்டும் பணிகளின் தற்போதைய நிலை:-

1. மொத்த இடங்கள் – 1,442
2. முடிவடைந்த பணிகள்- 570
3. நடைபெற்றுவரும் பணிகள் – 635
4. தொடங்கப்பட வேண்டிய பணிகள் – 237

ஆ) தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ்கண்ட சீறுநீர் கழிப்பான்கள் கட்டும் பணிகளின் தற்போதைய நிலை:-

1. மொத்த இடங்கள் – 1,357
2. முடிவடைந்த பணிகள்- 772
3. நடைபெற்றுவரும் பணிகள் – 448
4. தொடங்கப்பட வேண்டிய பணிகள் – 137

# <u>தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம்</u>

அறிவிப்பு **52**

**2022-2023ஆம் நிதியாண்டில் நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்திற்கான அடையாள அட்டை வழங்கிய நபர்களைக் கொண்டு, மண்டலம்-4 மற்றும் 6-ல் கீழ்கண்ட பணிகள் இத்திட்டத்தின் வரையறைகளின்படி மேற்கொள்ளப்படும் :-**

- **மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணி**
- **சாலையோரங்களில் மரம் நடும் பணி**
- **பூங்காக்களில் மரம் நடும் பணி**
- **மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்படும்**

மண்டலம்-4 (தண்டையார்பேட்டை) மற்றும் மண்டலம் - 6 (திரு.வி.க.நகர்)-ல் இதுவரை 3,00,000 வீடுகளில் கணக்கெடுக்கப் பட்டுள்ளது. அதில், 54,072 பேர் வேலை தேடுபவர்களாக கண்டறியப்பட்டு, 47,464 நபர்களுக்கு வேலைக்கான அடையாள அட்டை விநியோகம் செய்யப்பட்டது.

தற்போது, ரூ.213.79 இலட்சத்திற்கு 55,962 மனித நாட்களுக்கு பல்வேறு சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வார மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இதுவரை 48,430 நபர்களை கொண்டு 36,882.39 CUM அளவில் வண்டல் மண் தூர்வாரப்பட்டுள்ளது.

மண்டலம்-4 மற்றும் மண்டலம்-6-ல் மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணி முடிக்கப்பட்டு புதிதாக தூர்வாரும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

<u>**நிலம் மற்றும் உடைமைத்துறை**</u>

**அறிவிப்பு 53**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து நிலம் மற்றும் உடைமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு அதன் விவரங்களை கணினி மயமாக்கி (Digitization), புவியியல் தகவல் அமைப்பிலும் குறியீடு (GIS Mapping) செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. எனவே, மாநகராட்சியின் அனைத்து நிலங்கள் மற்றும் உடைமைகளை நிலஅளவை (Land Survey), எல்லை வரையறை (Demarcation), புவியியல் தகவல் குறியீடு (GIS Mapping) செய்து, அனைத்து விவரங்களும் தொகுக்கப்பட்ட மென்பொருள் செயலி (Web Application) ஒன்று உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.**

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 5,891 எண்ணிக்கையிலான நிலங்களின் விவரங்கள் 2022 – 2023 ஆண்டில் (ERP – CLAP Portal)–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, சொந்தமான 973 எண்ணிக்கையிலான திறந்தவெளி நிலங்கள், 2022 – 2023 ஆண்டில் பொது மக்கள் பார்வைக்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
3. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அளவீடு செய்யும் பொருட்டு 7 லைசன்ஸ் சர்வேயர்கள் 10.10.2022 அன்று முதல் ஒரு வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.
4. 2022–2023 ஆம் ஆண்டில் 242 எண்ணிகையிலான திறந்தவெளி நிலங்களுக்கு பெருநகர சென்னை மாகராட்சியின் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது.
5. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து நிலங்களை அளவீடு செய்து பாதுகாக்கும் வகையில் 2023–2024 ஆண்டு தனியார் நிறுவனம் மூலம் நில அளவை செய்து ஆவணங்கள் தயார் செய்யும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மின்சாரம்

### அறிவிப்பு 54

**புராதன கட்டடமான ரிப்பன் மாளிகையை நிறம்மாறும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்க ரூ.1.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி 2022-2023ஆம் நிதியாண்டில் முடிக்கப்படும்.**

ரிப்பன் மாளிகையை நிறம்மாறும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 02.06.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### அறிவிப்பு 55

**பெருநகர சென்னை மாநகராட்சி 10 மண்டலங்களான 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 மற்றும் 15-ல் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 மற்றும் 15 ஆகிய 10 மண்டலங்களில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள பணியாணை வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தகவல் தொழில்நுட்ப மையம்

### அறிவிப்பு 56

**பொதுமக்கள் எளிமையான முறையில் சொத்து வரியினை செலுத்துவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இந்த நிதியாண்டில் QR குறியீட்டினை செயல்படுத்தி பொதுமக்கள் சொத்து வரியினை செலுத்துவதற்கு வழிவகை செய்யப்படும்.**

சொத்துவரி ரசீதுகளின் பணம் செலுத்தும் இணைப்புடன் QR குறியீடு அச்சிடப்பட்டுள்ளது. QR குறியீட்டினை பயன்படுத்தி பொதுமக்கள் சொத்து வரியினை செலுத்துவதற்குரிய பணி முடியப்பெற்றுள்ளது.

## அறிவிப்பு 57

**ரிப்பன் கட்டடம் மற்றும் அனைத்து வட்டார அலுவலகங்களிலும் தானியங்கி கருவி (KIOSK) மூலம் சொத்து வரியினை செலுத்துவதற்கு வழிவகை செய்யப்படும். இதன் வாயிலாக பொதுமக்கள் தங்கள் சொத்து வரிக்கான காசோலைகளை மாநகராட்சி அலுவலர் உதவியின்றி தாங்களாகவே செலுத்தி கணினி ரசீதினை பெற்றுக்கொள்ளலாம்.**

ரிப்பன் கட்டட வளாகம் மற்றும் வட்டார அலுவலகங்களிலும் தானியங்கி கருவி (KIOSK) பொருத்தப்பட்டள்ளது. இவை விரைவில் துவக்கி வைக்கப்படவுள்ளது.

## அறிவிப்பு 58

**பெருநகர சென்னை மாநகராட்சியின் வணிக வாட்ஸ்அப் கணக்கு வாயிலாக ஏற்கனவே, பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்தல், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல், சொத்து வரி நிலை அறிந்து பணம் செலுத்துதல், தொழில் வரி செலுத்துதல் மற்றும் கட்டிட திட்டம் சமர்பிப்பதற்கான சேவைகள் நடைமுறையில் உள்ளது. மேலும், பொதுமக்களின் நலனுக்காக, தற்போதுள்ள சேவைகளுடன் கூடுதலாக பின்வரும் சேவைகள் வழங்கப்படும் :-**

- **வர்த்தக உரிமம் புதுப்பித்தல்**
- **நிறுவன வரி செலுத்துதல்**
- **கட்டட திட்ட விண்ணப்பத்தின் நிலையை நிகழ்நிலை (Online) மூலம் அறிதல்**

தற்போது, மேற்கூறிய பணிகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு **59**

**பெருநகர சென்னை மாநகராட்சியில், தற்பொழுது பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் Digital Locker வாயிலாக தரவிறக்கம் செய்யும் வசதி நடைமுறையில் உள்ளது. அதன் தொடர்ச்சியாக வர்த்தகர்கள் டிஜி லாக்கர் (Digi Locker) அமைப்பிலிருந்து வர்த்தக உரிமங்களை பதிவிறக்கும் செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்படும்.**

வர்த்தகர்கள் டிஜிலாக்கர் (Digilocker) அமைப்பிலிருந்து வர்த்தக உரிமங்களை பதிவிறக்கம் செய்யும் வசதி நடைமுறைப் படுத்த வழி வகை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறிவிப்பு **60**

**பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கூடுதலாக பின்வரும் சேவைகள் நம்ம சென்னை செயலியில் பயன்பாட்டில் அறிமுகப்படுத்தப்படும் :-**

- **தொழில் வரி செலுத்துதல்**
- **வர்த்தக உரிமம் புதுப்பித்தல்**
- **நிகழ்நிலையில் (Online) கட்டிட திட்ட விண்ணப்பத்தின் நிலை அறிதல்**

மேற்காணும் சேவைகள் நம்ம சென்னை செயலியில் பயன்படுத்தும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அறிவிப்பு **61**

**அரசு செயல்பாட்டில் செயல்திறன், நிலைத்தன்மை மேம்படுத்தவும் மற்றும் கோப்புகள் கையாள்வதற்கான நேரத்தை குறைக்கும் வகையிலும் சென்னை மாநகராட்சியில் மின் அலுவல் அமைப்பு (e-Office) அறிமுகப்படுத்தப்படும். இதன் வாயிலாக வரும் காலங்களில் பொது மக்களுக்கான சேவைகள் காலதாமதமின்றி விரைவாக செய்து முடிக்க இயலும்.**

**e-Office Stage -1:**

கணினி வழி கோப்புகள் கையாளுதல் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களில் கோப்புகள் உருவாக்குதல், ஒப்பமிட்டு அனுமதித்தல் போன்ற கோப்புகள் சம்மந்தமான பணிகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை துறைவாரியாக சேகரிக்கப்பட்டது. இப்பணி சம்மந்தமாக Tamil Nadu e-Governance Agency அலுவலகத்தில் உரிய படிவம் STAGE I பெறப்பட்டது. தலைமை அலுவலக அனைத்து துறைகள், 15 மண்டலங்கள், பகுதி அலுவலகங்கள், கோட்டங்கள் முதலானவைகளில் பணிபுரியும் கோப்புகள் கையாளும் அலுவலர்களின் எண்ணிக்கை ON DUTYயில் வேறு துறைகளில் இருந்து வந்து பணிபுரிவோரின் எண்ணிக்கையும் சேர்த்து 2,500 படிவங்கள் சேகரிக்கப்பட்டு TNeGAக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**e-Office Stage-2:**

Stage-1–க்கான படிவம் பூர்த்தி செய்யப்பட்டதன் அடிப்படையில், Stage-2–க்கான படிவங்கள் TNeGA அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது. கோப்புகள் கையாளுபவரின் அடிப்படை விவரங்கள் பணியாளர் எண், பெயர், பதவி, துறை, மண்டலம், பிறந்த தேதி, கைப்பேசி எண், nameDDMM@tn.gov.in மாதிரியில் 2,500 பணியாளர்களுக்கும் மின்னஞ்சல் ID தரவுகள் என Stage-2-க்கான படிவம் பூர்த்தி செய்யப்பட்டு, TNeGA அலுவலகத்திற்கு ஆய்வுக்காகவும் மின்னஞ்சல் உருவாக்கத்திற்காகவும் அனுப்பப்பட்டுள்ளது.

**e-Office Stage -3:**

Stage–1 மற்றும் Stage–2-க்கான படிவங்கள் TNeGA அலுவலகத்தில் ஆய்வுக்கு அனுப்பப்பட்ட விவரத்தின் அடிப்படையில், Stage-3-க்கான, Organization Chart தலைமை அலுவலக அனைத்து துறைகள், 15 மண்டலங்கள், பகுதி அலுவலகங்கள், கோட்டங்கள் முதலானவைகளில் பணிபுரியும் கோப்புகள் கையாளும் அலுவர்களின் எண்ணிக்கை பொறுத்து தனித்தனியே உருவாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு 62

**அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களும், மக்களின் குறைகளை உரிய நேரத்தில் நிவர்த்தி செய்யவும், அலுவலர்களின் தினசரி வருகையைக் குறிக்கவும், பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை கண்காணிக்க அதிகாரிகளுக்கு தெரிவு பலகை (Dashboard) ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC) வாயிலாக ஒரு புதிய பணியாளர் செயலி உருவாக்கப்பட்டு வெளியிடப்படும். இச்செயலி வாயிலாக அதிகாரிகள் பொதுமக்களுக்கான சேவைகள் குறித்த காலத்தில் முடிக்கப்படுகின்றனவா என்பதை திறமையான முறையில் கண்காணிக்க இயலும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளை கண்காணிக்கவும், துரிதமாக பணிகளை செயல் படுத்துவதற்கும், தனி செயலி (Work Force App) கள அலுவலர்களுக்கு நிறுவப்பட்டுள்ளது. இச்செயலி வழியாக நிவாரண மையங்கள், இயந்திரங்கள், பாம்பு பிடிப்பது, திருமண மண்டபம், தனியார் கல்லூரி மற்றும் வெள்ள தடுப்பு பணிகள் சார்ந்த விவரங்களை செயலியில் நிறுவப்பட்டு உபயோகப் படுத்தப்படுகிறது.

அறிவிப்பு 63

**இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக 2022-2023 நிதியாண்டில் ரூ.2 கோடி மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டத்திற்காகவும் மற்றும் ஒவ்வொரு மாமன்ற உறுப்பினருக்கு ரூ.35 இலட்சம் வீதம் 200 வார்டுகளுக்கும் மொத்தம் ரூ.70 கோடி மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு திட்டத்திற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மண்டலம்-1 முதல் 15 வரை தற்போது வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதி மூலம் பணி செய்ய மண்டல அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த விவரங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட மண்டலங்கள் மூலம் பராமரிக்கப்படும். மேலும், மாண்புமிகு மேயர் அவர்களின் மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டம் சம்பந்தமாக மாண்புமிகு மேயர் அவர்கள் பரிந்துரைக்கும் பணிக்கு சம்பந்தப்பட்ட துறையின் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அறிவிப்பு **64**

**புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாமன்ற உறுப்பினர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் நடைமுறைப் பணிகள் மற்றும் நிர்வாக விவரங்கள் குறித்து உரிய துறையின் அலுவலர்களால் பயிற்சி அளிக்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம், அறிவிப்பு எண்.64ல் குறிப்பிட்டுள்ளவாறு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு, 22.04.2022 (வெள்ளிக் கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நிருவாகம் சம்பந்தமான பயிற்சி துவக்கி வைக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அதற்குண்டான கையேடும், மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் மதிப்பிற்குரிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு மேற்படி நிகழ்ச்சியினை சிறப்பித்தார்கள். மேலும், இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் ஆகியோர்களும் கலந்து கொண்டார்கள்.

